# இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமி

கிருபாசக்தி கருணா,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-5.

இசையுலகில் சில கலைஞர்களுக்கு மட்டும் குரல்ஒலி சிரஞ்சீவியாய்-இளமையோடு இருந்து வந்துள்ளது. செம்மை, அரியக்குடி ஆகியவர்களின் வரிசையில் எழுபது வயதுக்குப் பிறகும் பழையபடியே இனிமையான குரலில் பாடி வந்தவர் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களாவர். இவரது தோற்றத்தில் சற்றே முதுமை தெரிந்தாலும் இசையில் இறுதிவரை அதே இனிமை, அதே உருக்கம், அதே பக்தி, அதே பழைய ஈர்க்கும் சக்தி இருந்தது.

## பிறப்பு

எம்.எஸ். அவர்கள், பிரபல வழக்கறிஞர் திரு. சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கும், பிரபல வீணைக் கலைஞராகத் திகழ்ந்த சண்முகவடிவு என்பவருக்கும் மகளாக 16.09.1916 அன்று பிறந்தார். பெரும் கலாரசிகரான தந்தையார் சங்கீதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தாயார் தம்மகளைச் செல்லமாகக் குஞ்சம்மா என்று அழைப்பார். எம். எஸ். அவர்களுக்கு சக்திவேல் என்ற ஒரு அண்ணனும், வடிவாம்பாள் என்ற ஒரு தங்கையும் இருந்தனர். சக்திவேல் ஒரு மிருதங்கக் கலைஞராகவும், வடிவாம்பாள் ஒரு வாய்ப்பாட்டுக் க்லைஞராகவும் வளர்ந்து வந்தனர். ஆயினும் தங்கை சிறுவயதிலேயே காலமாகிவிட்டார்.

## சிறுவயது கல்வி

சிறுவயதிலேயே தாயாரிடம் வீணையும், வாய்ப்பாட்டும் கற்றார். மிக விரைவிலேயே இசைஞானம் பெற்றார். பத்தாவது வயதிலேயே முதல் இசைத் தட்டுக்காகப் பாடும் சந்தர்ப்பம் வந்தது. ஒரு பக்கத்தில் செஞ்சுருட்டி இராகத்தில் 'மரகத வடிவு' என்ற பாடலையும், மறுபக்கத்தில் 'ஊத்திக் குழியிலே.'.. என்ற பாடலையும் பாடினார்.

பதின்மூன்றாவது வயதிலே மேடையேறினார். தாயுடன் சேர்ந்து பல கச்சேரிகள் செய்தார். அதற்குச் சில நாட்களின் பின் சங்கீதத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பாடும் சந்தர்ப்பங்களைப் பெறுவதற்கும் சென்னையே உகந்தது என எண்ணிய தாயாரான சண்முகவடிவு தன் குடும்பத்தைச் சென்னைக்குக் குடியேற்றினார். தீஞ்சுவைக் குரல் படைத்த தன்மகளைப் பெரியஅளவில் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி, தனியாகவே பாடச் செய்ய வேண்டும் என்று அவர் திட்டம் வகுத்தார். அவருடைய குரல் இனிமை, அழகு, சின்னவயது ஞானம், வார்த்தைகளைத் தெளிவாய் உச்சரிக்கும் திறம் ஆகியவற்றால் இவரது பெயர் நாடு முழுவதும் பரவியது. 17 வயதில் சென்னை சங்கீத அகடமியில் இவர் கச்சேரி செய்தது இவரது வாழ்வில் முக்கிய திருப்பத்தைக் கொடுத்தது.

*திருமணம்*

எல்லாவற்றையும்விட அதிமுக்கியமான நிகழ்ச்சி சகுந்தலையின் படிப்பிடிப்பின்போது நடந்தது. அங்குதான் தன் நண்பர் தத்துவஞானியாகிய உன்னத மனிதர் படத்தின் தயாரிப்பாளரான டி. சதாசிவம், எம்.எஸ்-ஐ சந்தித்தது. அவரைத் திருநீர்மலையில் திருமணம் செய்துகொண்ட நிகழ்ச்சி 1940இல் நடந்தது. இதன்பிறகு சதாசிவம் அவர்கள் எம்.எஸ். என்ற இசை ஜோதியைக் கட்டிக்காத்து, அதுமேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்யும் அருட் பணியை மேற்கொண்டார். சதாசிவத்தின் காலஞ் சென்ற முதல் தாரத்தின் மகள்களான ராதா, விஜயா ஆகிய இருவருக்கும் அன்புத் தாயாகவும், ஆதர்ச பத்தினியாகவும் அவர் இருந்து வந்ததை உலகம் வியப்போடு வரவேற்றது.

சகுந்தலைக்குப் பிறகு சாவித்திரி என்ற படத்தில் ராதாவாக நடித்தார். இதன்மூலம் 'ப்ருஹிமுகம்தேதி', 'சொல்லுகுழந்தாய்' போன்ற செவிக்கு இனிய பாடல்களைப் பாடிப் பரப்பினார். கடைசியாக மீரா படம் வந்தது. முதலில் தமிழில் அப்புறம் ஹிந்தியில் மீராவாகவே மாறித்தானும் உருகி, பார்த்தவர்களையும் உருகச் செய்தார். குழந்தை ராதா, குழந்தை மீராவாக நடித்தாள். அமரர் கல்கியின்

'காற்றினிலே வரும் கீதம்'- போன்ற பாடல்கள் அப்படத்தில் அற்புதமாய்ப் பாடப்பட்டன. மீரா-வின் வெற்றி, ஹிந்தியில் வெளியிடத்துணிச்சலைச் சதாசிவத்திற்கு அளித்தது.

*எம்.எஸ்.இன் புகழ் பரவக் காரணமானவர்கள்*

எம்.எஸ்.-இன் புகழை அதிகரிக்க, அவரது கணவர் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்தார். அமரர் கல்கியும் தம் பங்குக்குத் தமது பத்திரிகையான கல்கியில் நிறைய எழுதினார். தலைவர் ராஜாஜி, ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாரும் இவரது இசைச் சிறப்பைத் தக்க விதத்தில் தக்க சமயங்களில் ஆதரித்தார்கள். சதாசிவம் கல்கி அவர்களோடு சேர்ந்து ஆனந்தவிகடனில் பணியாற்றியதோடு கல்கி பத்திரிகையை அவர் தொடங்கவும் காரணமாக இருந்தார். பத்திரிகைக்கு வேண்டிய மூலதனத்துக்காக எம்.எஸ்-இன் நிதியுதவி சாவித்திரி பட நடிப்பின் மூலமாகத்தான் கிடைத்தது.

*எம்.எஸ்.ஸியின் நிதியுதவி*

கல்கி பத்திரிகைக்கு உதவத் தொடங்கிய இவர், தம் இசை மூலம் இன்னும் எத்தனையோ பணிகளுக்காக உதவி புரிந்தார். ராஜாஜியுடன் சதாசிவத்திற்கு இருந்த நட்பின் மூலம் அரசியல் உலகிலும் எம்.எஸ்.ஸியின் புகழ் பரவியது. 1943இல் அன்னை கஸ்தூர்பா இறந்தபோது, கஸ்தூர்பா நினைவு நிதிக்காக எம்.எஸ். பல கச்சேரிகள் செய்து நிதி திரட்டினார். பிறகு மகாத்மா காந்தி அமரரான போது, மகாத்மா காந்தி நினைவு நிதிக்கும் லட்சக்கணக்கில் நிதி திரட்ட அவர் பல கச்சேரிகள் செய்தார். இடையில் பாரதியார் நினைவு மண்டபம் எட்டயபுரத்தில் எழுவதற்கும் நிதி உதவி கொடுப்பதற்காக விசேட கச்சேரிகள் செய்தார். திருவாரூரில் தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர் ஆகியோரின் பிறந்த இல்லங்களை வாங்கவும், நினைவு மண்டபங்கள் எழுப்பவும்கூட இவரின் நிதி சென்றது.

*மகாத்மாகாந்தியுடன் எம்.எஸ்.*

ஜவஹர்லால் நேரு முதல் பல அரசியல் தலைவர்களால் பாராட்டப்பட்ட எம்.எஸ்.ஸி.யின்

பாடல்களால் மகாத்மாகாந்தியும் கவரப்பட்டார். காந்திக்கு மீரா பஜன்களில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. 1947ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி மகாத்மா காந்தி தமது பிறந்த நாளன்று 'ஹரி தும்ஹரோ' பாடலைப் பாடவேண்டி விருப்பம் தெரிவித்தார். அதற்குச் சில தினங்களுக்கு முன்பே, வானொலி நிலையம் மூலம் துளசிதாஸ், கபீர்தாஸ், சூர்தாஸ், மீரா ஆகியோருடைய சில பஜன்களை இசைநாடாவில் பதிவுசெய்து தில்லிக்கு அனுப்பியிருந்தார். ஆயினும், காந்தி குறிப்பிட்ட பாடலைக் கேட்கவே விரும்பினார். அதனால், வானொலி நிலையம் சென்று தகுந்தவர்களைக் கொண்டு குறிப்பிட்ட பாடலுக்கு இசையமைக்கச் செய்து, எம்.எஸ். பாடி ஒலிப்பதிவு செய்து தில்லிக்கும் நாடா அனுப்பப்பட்டு காந்தியின் விருப்பம் நிறைவேற்றப்பட்டது. இதன்பின்னர் 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் தேதி காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டார். வானொலியில் இந்தத் துக்கச் செய்தியைச் சொல்லிவிட்டு, எம்.எஸ். பாடிய 'ஹரிதும் ஹரோ'.... என்ற பாடலை ஒலிபரப்பினார்கள். மிகுந்த கவலையுற்ற எம்.எஸ். இப்பாடலை (பஜனை) சுமார் ஒரு வருட காலத்திற்குத் தன் கச்சேரிகளில் பாடுவதைத் தவிர்த்தார் என்று கூறப்படுகிறது.

### எம்.எஸ்-ஸின் இசை ஆசான்கள்

தம் தாயாரிடம் ஆரம்ப பாடல்களைக் கற்ற எம்.எஸ். பிறகு மதுரை ஸ்ரீனிவாஸ ஐயங்கார், சேத்துார் சுந்தரேச பட்டர், மாயவரம் வி.வி.கிருஷ்ண ஐயர் ஆகியோரிடமும் இசை பயின்றார். சென்னைக்கு வந்த பிறகு வீணை தனம்மாளின் குடும்பத்தினரோடு பழக்கம் ஏற்பட்டது. பால சரஸ்வதியும் பிருந்தாவும் பல பதங்களையும் ஜாவளி களையும் கற்றுத் தந்தார்கள்.

இதன்பின் பாபநாசம்சிவன் திரைஇசையோடு வேறு பல பாடல்களையும் சொல்லித் தந்தார். திருமணத்திற்குப் பிறகு செம்மங்குடி சீனிவாஸ ஐயர், முசிறி டி.எஸ் வெங்கட் ராமஐயர், கே.எஸ். நாராயணசாமி, டாக்டர் ராமநாதன், எஸ். ராஜம், கே.வி.என்.கடையநல்லுார் வெங்கட்ராமன் என்று பலரிடம் இசைப்பாடல்களைப் பயின்று தம் சங்கீதத்தை அபிவிருத்தி செய்து கொண்டார். நேதநுாரி கிருஷ்ண

மூர்த்தியும், டிபசுபதியும் அன்னமாச்சார்யா கிருதிகளைக் கற்றுத் தந்தனர். செம்மங்குடியிடம், ஸ்வாதித்திருநாள் கீர்த்தனைகளைப் பாடம் செய்ததுடன் இசை சம்பந்தமாய் பல நுணுக்கங்களை அறிந்துகொண்டார். செம்மங் குடியும், முசிறியும் என் குருநாதர்கள்- என்று எம்.எஸ். தமக்குச் சங்கீத கலாநிதி பட்டம் அளிக்கப்பட்ட போது கூறியுள்ளார். யாரெல்லம் தமதுஇசை அறிவை வளர்க்க உதவ முடியுமோ அவர்களையெல்லாம் அணுகி அக்கறையோடு, பக்தியோடு கற்றுக் கொண்டது அவரது உயர்ந்த பண்பைக் குறிக்கிறது.

மீரா பஜன்களைக் கற்பதற்காகத் திலீப்குமார் ராய் பல நாட்கள், கல்கி அவர்களின் தோட்டத்தில் முகாம் இட்டிருந்தார். மற்றும் சீனிவாசராவ், சித்தேஸ்வரிதேவி ஆகியோரிடமும் பஜன்களைக் கற்றுக்கொண்டார்.

இசைத்தட்டுகளில் பாட அவருக்கு யோசனைகள் வழங்கிப் பக்குவப்படுத்தியவர் துறையூர் ராஜகோபால சர்மா அவர்கள். ஐக்கிய நாடுகள் சங்கத்தில் 1966 அக்டோபரில் பாடச் சென்றபோது ஆங்கிலத்தில் துதிப் பாடல் பாடவேண்டுமென்று இராணுவத் தலைமை அதிகாரி கரியப்பா சதாசிவத்திற்கு யோசனை கூறினார். அதையேற்று சதாசிவம், ராஜாஜி அவர்களையே ஒரு பாடல் இயற்றித் தரச்சொல்லி ஹண்டல் மான்யுவல் அவர்களை இசையமைக்கச் சொல்லிக் கற்றுத்தரவும் செய்தார்.

இசைக்கச்சேரிகளோடு நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பாடும் பணியையும் செய்து வந்தார். இவர் பெற்ற பட்டங்கள் பத்மபூஷன்(1954), சங்கீத நாடக அகாடமி விருது(1956), டாக்டர்(1967), சங்கீத கலாநிதி(1969), கௌரவ டாக்டர்(1971), கௌரவ டாக்டர்(1973), மக்சாராய் விருது(1974), பத்மவிபூஷண்(1975), கௌரவ டாக்டர்(1979), சங்கீத விதுஷிமணி(1981), கௌரவ டாக்டர்(1987).

பல்வேறு நாடுகளுக்குச் சென்று இசைப்பயணத்தை செய்த எம்.எஸ். அவர்களிடம் இருந்த தேசப்பற்றும், போதுமென்ற மனமும் புகழுக்கும் பணத்திற்கும் அடிமை ஆகாத சமநிலை உணர்வும் எளிமையும்தான் அவர்களின் உயர்வுக்குக் காரணமானது. எல்லாவற்றுக்கும் மேலாக கணவரின் வழிகாட்டல் முக்கிய காரணமானது.